[30th November 1970

கால்நடை மருத்துவமனை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சேலம் மாவட்டம், பேளூரில் உள்ள அங்காளம்மன் கோவிலினுள், கால்நடை மருத்துவமனை செயல்படுகிறது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன?

(உ) அந்த இடத்திலிருந்து அதை இடம் மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) இல்லை. கால்நடை வளர்ப்புத் துறையின் துணை நிலையம் ஒன்றுதான் அங்கு செயல்பட்டு வந்தது.

(இ) யும் (உ) வும் : அக்கிளை நிலையத்தை கோயில் கட்டடத்தினின்று காலி செய்து வேறு தகுந்த இடத்திற்கு மாற்றும்படி அரசு ஆணை பிறப்பித்தது. அதன்படி, அந்நிலையம் தற்போது, பேலூர் அஞ்சல் நிலையத்திற்கு அருகில் உள்ள தனியார் கட்டிடம் ஒன்றில் மாற்றப்பட்டு செயல்பட்டுவருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : எவ்வளவு காலமாக அந்தக் கிளை நிலையம் கோயிலுக்குள் நடந்து வந்தது என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : 1966-ஆம் ஆண்டிலிருந்து அந்த நிலையம் அங்கே செயல்பட்டு வந்தது. அதன் பிறகு கால்நடை ஆஸ்பத்திரியில் என்று போட்டிருக்கிறது. கால்நடை ஆஸ்பத்திரி அங்கே எப்போதிருந்து இருந்தது என்றில்லை. சப்-செண்டரில்—கீ வில்லேஜ் சப் செண்டரில்—1966-ல் இருந்து இருந்தது. அதற்குப் பிறகு கால்நடை இலாக்கா ''ரீயார்கனைஸ்'' செய்யப்பட்ட பிறகு, இந்த சப் செண்டரில்தான் இயங்கி வந்தது. இப்போது இது சர்க்காரின் கவனத்திற்கு வந்து வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : இது போன்ற விலங்கு மருத்துவமனை ஒன்று தஞ்சை பெரிய கோயிலான பிருகதீஸ்வரர் கோயிலுக்குள் நடைபெற்றுவருவது அரசுக்குத்தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அரசுக்குத் தெரியாது. அப்படியிருந்தால், அதுபற்றி விசாரிக்கலாம்.

Rubber Plantations

*30. Q.—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) the expenditure incurred by the Tamil Nadu Government to grow Rubber Plantations during the financial year 1969-70; and

(*b*) the income derived by the Tamil Nadu Government through Rubber Plantations during the financial year 1969-70 ?

30th November 1970]

ரப்பர் மரத் தோட்டம்

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1969-70-ஆம் நிதி ஆண்டில், தமிழ் நாடு அரசினல் ரப்பர் மரத் தோட்டங்கள் பயிரிடுவதற்குச் செய்யப்பட்ட செலவு எவ்வளவு ?

(இ) 1969-70-ஆம் நிதி ஆண்டில் தமிழ் நாடு அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ரூ. 9.14 லட்சம் (ஒன்பது லட்சத்து பதினன்காயிரம் ரூபாய்).

(இ) ரூ. 1.83 லட்சம் (ஒரு லட்சத்து எண்பத்து மூவாயிரம் ரூபாய்).

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: தலைவர் அவர்களே, 1969-70ல் எத்தனை ஏக்கரில் புதிதாக ரப்பர் பயிர் செய்யப்பட்டிருக்கிறது? 1969-70க்கு முன்னல் பயிர் செய்யப்பட்ட நிலங்களில் எத்தனை ஏக்கர்களி லிருந்து ரப்பர் பலன் கிடைக்கிறது என்ற விவரம் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : தனித் தனியாகக் கணக்கில்லை. மொத்தமாக இதுவரையில் 23,000 ஏக்கர் நிலப் பரப்பில் ரப்பர் பயிரிட்டிருக்கிருர்கள். ரப்பர் பயிர், பயிரிட்ட 9 ஆண்டுகளுக்குப் பிறகு தான் பலனளிக்கத் தொடங்கும். இதன் மூலமாக இந்த 3 ஆண்டுகளில் 4,73,000 ரூபாய் வருமானம் கிடைத்திருக்கிறது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு தான் ரப்பர் பயிர் நிறைய வருமானத்தைத் தரும்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : ரப்பர் விலையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வின் காரணமாக வியாபாரிகள்தான் குறைந்த விலைக்கு ரப்பரை வாங்குகிருர்கள். பிறகு அந்த வியாபாரிகளிடமிருந்து ரப்பர் போர்டு விலைக்கு வாங்குகிறது. உயர்ந்த விலை கொடுத்து வாங்குகிற ரப்பர் போர்டு நேரடியாகப் பயிரிடுவோரிடம் வாங்குவதில்லை என்டதால், மத்திய அரசின் மூலமாக ரப்பர் போர்டே ரப்பரை நேரடியாக வாங்குவதற்கான ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : இப்போதே ரப்பர் போர்டே வந்து கலந்து கொண்டு வாங்கலாம்.

UNSTARRED QUESTIONS

Polichalur Brick Workers Industrial Co-operative Society Limited

1. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether it is a fact that the Polichalur Brick Workers Industrial Co-operative Society Limited is incurring loss ?